**சுருக்கம்**

பெயர் மாற்றம் – சென்னை மாவட்டம் – சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தியாகராயர் நகர், மண்டலம் – 8, வார்டு – 127 ல் உள்ள பாண்டி பஜார் என்றழைக்கப்படும் ''பாண்டியன் கடைத் தெரு'' என்ற பெயரினை ''சவுந்தர பாண்டியன் கடைத் தெரு'' என பெயர் மாற்றம் செய்ய அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசாணை (நிலை) எண்:197 நாள்:-10.10.2008.
புரட்டாசி– 24,
திருவள்ளுவர் ஆண்டு –
2039,

படிக்கவும்:-

1. அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் (மாந2) துறை, நாள் 30.06.1998
2. அரசாணை (ப) எண்.573, நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 14.12.2001.

மீண்டும் படிக்கவும்:

3. சென்னை மாநகராட்சி ஆணையர் கடித எண்.நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/ 3218/2008, நாள் 30.09.2008

* * * * * *

**ஆணை:–**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17.09.2008 அன்று சென்னையில் சர்.பிட்டி.தியாகராயர் – டாக்டர் சி.நடேசனார் – டாக்டர் டி.எம்.நாயர் ஆகியோரின் அஞ்சல் தலைகள் வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் பேசும்போது தி.நகரில் உள்ள பாண்டியன் பஜார், பாண்டியன் கடைத் தெரு என்றும், டபிள்யூ.பி.ஏ. சவுந்தரபாண்டியன் பெயரால் அமைந்த பகுதி எனவும், அவர் திராவிட இயக்கத்தின் தலைவர்களியே ஒருவராகவும் இருந்தார் எனவும், பாண்டியனைப் பற்றிய உணர்வு மறக்க முடியாத காரணத்தால், சவுந்தரபாண்டியன் கடைத் தெரு என்று மாற்றப்படும் என்ற உறுதியை அளிப்பதாக அறிவித்து இருந்தார்.

2. சென்னை மாநகராட்சி ஆணையர் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.536/2008, நாள் 30.09.2008 ல் மண்டலம் – 8, வார்டு – 127 ல் உள்ள ''பாண்டியன் கடைத் தெரு (பாண்டிபஜார்)'' என்று இருப்பதை ''சவுந்தர பாண்டியன் கடைத் தெரு'' எனப் பெயர் மாற்றம் செய்ய அரசின் ஆணை

வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றம் அனுமதி அளித்துள்ளது எனவும், எனவே இதற்கு அரசின் ஆணை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதலாவதாக மற்றும் இரணடாவதாக படிக்கப்பட்ட ஆணைகள் நடைமுறையில் உள்ள சூழ்நிலையில், சென்னை மாநகராட்சி ஆணையரது முன்மொழிவினை அரசு கவனமுடன் பரிசீலீனை செய்தது. அதனடிப்படையில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தியாகராயர் நகர், மண்டலம் – 8, வார்டு – 127 ல் உள்ள பாண்டிபஜார் என்றழைக்கப்படும் ''பாண்டியன் கடைத் தெரு'' என்ற பெயரினை ''சவுந்தர பாண்டியன் கடைத் தெரு'' என பெயர் மாற்றம் செய்ய சென்னை மாநகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
சென்னை மாவட்ட ஆட்சியர், சென்னை – 1.
காவல்துறை ஆணையர், சென்னை – 8

நகல்:
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர் (திரு.கே.ஆர்), சென்னை – 9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை – 9
இருப்ப கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.